

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2047 | டிசம்பர் 15, 2016 | புரட்சி 15 | முழக்கம் 48 | விலை: ரூ.3.00


## சீருடையுடன் கூடுவோம்!

டிசம்பர் 24, சேலம் மாநாட்டுக்கு, தோழர்கள் கட்டாயம் கழக சீருடையான கருப்பு சட்டை - நீலநிற ஜீன்ஸ் பேண்டுடன் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சீருடையில், பெரியார் பெரும் படையின் பேரணியும், அணி வகுப்பும் மாநாட்டில் மிகவும் முத்தாய்ப்பானது என்பதை சொல்லத் தேவையில்லை.

பெரியார் இயக்க வரலாற்றில் பல திருப்பங்களை ஏற்படுத்திய பெருமை சேலத்துக்கு உண்டு.

இதே சேலத்தில்தான் தென்னிந்திய நல உரிமைச் சங்கம், திராவிடர் கழகமாக பெயர் மாற்றமும், பண்பு மாற்றமும் பெற்றது.

இந்த சேலத்தில்தான் வேத மத மறுப்பின் தொடர்ச்சியாக 1971ஆம் ஆண்டு பெரியார் நடத்திய மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் நாட்டையே கலங்கடித்தது!

பெரியார் சிந்தனைகளை மக்களிடம் கொண்டு செல்லும் நோக்கத்தோடு மாநாட்டின் தலைப் பிலும் கருத்தரங்க தலைப்புகளிலும் புதிய யுக்தியை கழகம் பின்பற்றி யிருக்கிறது.

கடவுள் மறுப்புக் கொள்கையை ஏற்காத வேத மத மறுப்பாளர்கள் பலரும் மாநாட்டில் பேசவிருக் கிறார்கள்.

மாநாட்டின் அரங்குகளுக்கும் வேத மரபு மறுப்பாளர்களின் பெயர்களே சூட்டப்பட்டிருக்கிறது.

புதிய அணுகுமுறையில் தமிழகத்தில் காலூன்ற துடிக்கும் சங்பரிவார் பார்ப்பன சக்திகளை சந்திக்கப் போகிறோம்.

மாநாட்டின் தலைப்பைக் கேட்ட வுடன் பலரும் பாராட்டுகளையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தி வருகிறார்கள்.

மாநாட்டின் வெற்றிக்கு கழகச் செயல் வீரர்கள் பம்பரமாகச் சுழன்று பணியாற்றுகிறார்கள்.

கழகத் தோழர்களே! குடும்பத் துடன் வாருங்கள். ஆதரவாளர்கள் உணர்வாளர்களிடமும் எடுத்துச் சொல்லி அவர்களையும் மாநாட்டுக்கு வர ஏற்பாடு செய்யுங்கள்.

கட்டாயம் சீருடையுடன் வாருங்கள்!

சேலத்தில் சந்திப்போம்!

### வேத மரபு மறுப்பாளர்கள் ஒன்று கூடுகிறார்கள்!

# ‘களை’ கட்டுகிறது சேலம் மாநாடு!



பூமியில் இருந்த கடவுள்களை விண்ணுலக கடவுள்களாக மாற்றிய பார்ப்பனர்கள், அந்த கடவுள்களிடம் நேரடி தொடர்புக்கு ‘மந்திர சக்தி’, ‘யாகம்’, ‘சடங்கு’களை சமூகத்தில் திணித்த வரலாற்றை கடந்த இதழில் எழுதியிருந்தோம். பார்ப்பனர்களின் சடங்குகளும் யாகங்களும் எல்லை மீறிய போது மக்கள் வெறுக்கும் நிலை உருவானது. அப்போது இந்த புரோகித சடங்குகளுக்கு எதிர்ப்புகள் உருவாகத் தொடங்கின. எந்த வகையான எதிர்ப்புகள்?

- சடங்கு, யாகங்களை கைவிட்டு, காடுகளுக்குச் சென்று உடலை வருத்திக் கொண்டு, ‘ஆன்ம பலம்’ பெற்று வாழ்வின் துயரங்களுக்கு விடை காண முடியும் என்று நம்பிய சிலர், காடுகளுக்குப் போனார்கள். சடங்கு, யாகங்களை எதிர்த்தார்கள். யாகம் செய்வதைவிட ‘தியானமே’ சரியானது என்பது இவர்கள் கொள்கை. இதற்காக காடுகளுக்கு சென்றவர்கள் உருவாக்கிய சிந்தனைதான் ‘ஆரண்யகம்’, யாக மோசடிகளை புரோகித நயவஞ்சகத்தை ‘ஆரண்யகம்’ தோலுரித்தது. (யாகம் - சடங்குகளுக்கு எதிராக உருவானதே தியானம். இப்போது பார்ப்பனியம் ‘தியான’த்தையும், வேத மரபோடு இணைத்துக் கொண்டுவிட்ட சூழ்ச்சியை புரிந்து கொள்ள வேண்டும்.)
- ஆரண்யகங்களைத் தொடர்ந்து பகுத்தறிவு சிந்தனை வளர்ச்சியால் உருவானதே ‘உபநிடதங்கள்’. உபநிடதங்களை உருவாக்கியவர்கள் யாகங்களை எதிர்த்து காட்டுக்கு ‘தவம்’ செய்யச் சென்றவர்கள். இவர்களிலேயே பவுத்தர்களும் இருந்தார்கள்.
- வேத புரோகித பார்ப்பனர்களுக்கும் ஆட்சி செய்த மன்னர்களான சத்திரியர்களுக்கு மிடையே முரண்பாடுகள் தலைதூக்கின. பார்ப்பனர்களின் புரோகித சடங்குகளை நேரடியாக எதிர்த்த சத்திரிய மன்னர்களும் இருந்திருக்கிறார்கள். உதாரணமாக ஜனமே ஜெயன் - என்ற சத்திரிய மன்னன், பார்ப்பனர்களை புறக்கணித்து, யாகம் நடத்தியதாலும் அவன் பார்ப்பனர்களுக்கு எதிராக வன்முறையில் இறங்கியதாலும் தான் அவனது யாகமே சக்தி இழந்தது என்று கவுடில்யன் எனும் பார்ப்பனன் ‘அர்த்த சாஸ்திரம்’ நூலில் எழுதியிருக்கிறான்.
- 200க்கும் மேற்பட்ட உபநிடதங்கள் இருக்கின்றன. வேதத்தோடு இணைத்துப் பார்க்கப்படுவது 108 உபநிடதங்கள்தான். ஏனையவை புரோகித வேத பார்ப்பனர்களுக்கு எதிராக சத்திரியர்களிடமிருந்து எழுந்த எதிர்ப்புக் குரல்.
- உபநிடதங்களின் தொடர்ச்சியாக 6 சிந்தனை மரபுகள் உருவாயின. இதில் வைசேஷிகம், நியாயம், சாங்கியம், யோகியம் ஆகிய நான்கு மரபுகள், வேத புரோகித சடங்குகளை கேள்வி கேட்டன. பின்னர் காலப் போக்கில் பார்ப்பனியம் அவற்றை உள்ளிழுத்துக் கொண்டது.
- கி.மு. 6ஆம் நூற்றாண்டில் ‘பரிவிராஜகர்’ (நாடோடிகள்) என்ற கலக அமைப்பு ஒன்று வேத புரோகித மரபுக்கு எதிராக உருவானது. வேத பார்ப்பனக் கொடுமைகளை எதிர்த்த இவர்கள் தங்கள் குடும்பங்களைத் துறந்து வெளியேறி ஊர் ஊராகச் சென்று மக்களை சந்தித்து வேத பார்ப்பன மதத்துக்கு எதிராக பிரச்சாரம் செய்தனர். வைதீகப் பார்ப்பனர்கள் எதிர்ப்பை சந்தித்து, அறிவுப் புரட்சிக்கு களம் அமைத்த வரலாற்றுப் பெருமை இவர்களுக்கு உண்டு. பரிவிராஜகர்களில் எவரும் பார்ப்பனர்கள் இல்லை.
- வேதங்களை மறுத்தவர்களை பார்ப்பனர்கள் ‘நாத்திகர்கள்’ என்றார்கள். அக்காலத்தில் உருவானது ‘லோகாயதா’ சிந்தனை. லோகாயதா என்றால் மக்களிடையே பரவி இருப்பது என்பது பொருள். லோகாயதவாதிகள் வேதங்களை மறுத்து எழுதிய இலக்கியங்களை முழுமையாக பார்ப்பனர்கள் அழித்தார்கள். ‘லோகாயத்துக்கு’ மறுப்பு எழுதியவர்கள் மேற்கோளாகக் காட்டிய எழுத்துகள் மட்டுமே இப்போது காணக் கிடக்கின்றன.
- லோகாயதக் கருத்துகளை எளிய நடையில் எழுதியவர் சார்வாகர். அதனாலே பார்ப்பனர்கள் ஏச்சுக்கும் எதிர்ப்புக்கும் உள்ளானார். சார்வாகம் என்ற சொல்லுக்கு ‘இனிமையான பேச்சு’ என்று பெயர். வேத மறுப்பு மதங்களான சமணம், பவுத்தம் தோன்றுவதற்கு அடித்தளம் அமைத்தது ‘சார்வாகம்’தான்.
- புத்த மார்க்கம், பார்ப்பன வேதச் சடங்குகளை கேள்வி கேட்டது. அதனால், புத்தர் இயக்கத்தை பார்ப்பனியம் ஊடுருவி அழித்தது. புத்தருக்குப் பிறகு வேத மரபு மறுப்பாளர்கள் பலரும் தோன்றினர். வைகுண்டசாமி வடலூர் வள்ளலாரும்

(4ஆம் பக்கம்)

# தமிழகத்தில் பா.ஜ.க. கால் ஊன்றுமா?

***‘அந்திமழை’ டிசம்பர் மாத இதழில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய கட்டுரை.***

மகாராஷ்டிராவை ‘இந்து இராஜ்ய மாக்குவோம்’ என்ற முழக்கத்தை முன்வைத்து அங்கே ஆட்சியைப் பிடித்தது சிவசேனை. அதேபோல் தமிழ்நாட்டை இந்துக்களின் தேசமாக மாற்றிக் காட்டுகிறாம் என்று கூறி வாக்கு கேட்கும் துணிவு தமிழக பா.ஜ.க. வுக்கோ, அதன் சார்பு அமைப்புகளுக்கோ இருக்குமா? இத்தனைக்கும் ‘இந்தியா இந்துக்களுக்கான நாடு’ என்பதற்காகவே தொடங்கப்பட்டதுதானே பாரதிய ஜனதா! மகாராஷ்டிராவில் முன் வைத்த முழக்கத்தை தமிழ்நாட்டில் கூறிவிட்டு, தங்கள் அரசியலை முன்னெடுக்க முடியாது என்பது அதன் தமிழக தலைவர்களுக்கே தெரியும்!

தமிழ்நாடு, மத தேசியத்திலிருந்து தன்னை முற்றிலுமாக விலக்கிக் கொண்டிருக்கிற ஒரு மாநிலம். தமிழ், தமிழன், சமூக நீதி, சமூக நல்லிணக்கம் என்பதே தமிழக அரசியலுக்கான மய்ய நீரோட்டம், இதற்கான விதைகள், 1920ஆம் ஆண்டுகளிலேயே இங்கே விதைக்கப்பட்டு விட்டன. திராவிடர் இயக்கம், திராவிட அரசியல் கட்சிகளின் வேரை தமிழகத்தில் கிள்ளி எறிந்து விடுவது அவ்வளவு எளிதானது அல்ல. தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சராக இருந்த இராஜாஜியை தமிழர்கள் ஏற்க மறுத்ததும் அதே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த காமராசரை தலை மீது வைத்து கொண்டாடியதற்குமான காரணங்களை ஆராய்ந்தாலே போதும். இது “குலக்கல்வி”க்கும் அனைத்து மக்களுக்குமான “இலவச கல்வி”க்கும் இடையே எழுந்த முரண்பாடு; முந்தையது - ‘மதவழி தேசியம்’; பிந்தையது ‘இனவழி சமூக தேசியம்’!

1967ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ் நாட்டில் அகில இந்திய கட்சிகள் அரசியலைக் கைப்பற்ற முடியாமல் திராவிட கட்சிகளின் ‘தயவுகளோடு’ தங்களுக்கான சில இடங்களை மட்டுமே அவர்களால் பிடிக்க முடிந்திருக்கிறது. ‘மத நல்லிணக்கம்’ பேசும் காங்கிரசு கட்சியையே தமிழகம் ஏற்காதபோது, ‘மத வெறுப்பு’ அரசியலை முன்னிறுத்தும் பா.ஜ.க.வை தமிழகம் எப்படி ஏற்கும்? தமிழகத்தில் பா.ஜ.க. வேர் பிடிக்காது என்பதற்கான காரணங்களை அலசுவோம்.

முதலாவதாக மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் உரிமைகளானாலும் சரி; கல்விக் கொள்கையானாலும் சரி; மொழிப் பிரச்சினை களானாலும் சரி; தமிழகம் வரலாறு நெடுக தனித்துவமாகவே பயணித்திருக்கிறது. இந்த தனித்துவத்தை தமிழக பா.ஜ.க. ஏற்க வேண்டும். இதற்கு அகில இந்திய பா.ஜ.க.வும் ஒப்புதல் தர வேண்டும். மக்கள் நம்பிக்கை பெறுவதற்கு இதுவே அடிப்படை. அதற்காக பா.ஜ.க. மேற் கொண்டு வரும் சந்தர்ப்பவாதங்களும் இரட்டை வேடங்களும் தமிழக மக்களிடமிருந்து அவர்களை அன்னியப்படுத்தியே வருகின்றன.

இரண்டாவதாக, தமிழ்நாடு மக்களின் ‘இந்து மத உணர்வு’ தங்களுக்கான சமூகநீதியை யும் இணைத்துக் கொண்டிருக்கிறது. இது வடமாநில இந்துமத வெறியிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. தன்னை ஒரு ‘இந்து’வாக நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழக மக்கள், தங்களுக்கான இடஒதுக்கீடு உரிமைகளை பலிகடாவாக்கிக் கொண்டு ‘இந்து’க்களாக வாழ்வதற்கு தயாராக இல்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி வேலை, வாய்ப்பு, பண்பாடு களுக்கு எதிராக நடுவண் பா.ஜ.க. ஆட்சி நடைமுறைப்படுத்தும் கொள்கைகள் தமிழ்நாட்டு மக்களிடையே எதிர்வினைகளையே உருவாக்கி வருகின்றன.

மூன்றாவதாக, ‘காவிரி மேலாண்மை வாரியம்’ அமைப்பதில் பா.ஜ.க. ஆட்சியின் இரட்டை வேடம். தமிழ்நாட்டில் தொடர்வண்டித் துறை உள்ளிட்ட மத்திய அரசு அலுவலகங்கள், நிறுவனங்களில் பிற மாநிலத்தவர்களைக் குவிக்கும் போக்கு, சமஸ்கிருத திணிப்பு, மாட்டுக்கறி தடை என்று எத்தனையோ சான்றுகளைக் காட்ட முடியும்.

நான்காவதாக, அம்பேத்கரை, புரட்சியாளர், அண்ணல், டாக்டர் என்றே விளித்துப் பழகிய தமிழ்நாட்டில், ‘ஸ்ரீமான் அம்பேத்கர் ஜெயந்தி’யை ஆர்.எஸ்.எஸ். பேரணி நடத்தி கொண்டாடுகிறது. இதனால் தலித் மக்களை தங்கள் அணிக்கு இழுத்து வர முடியும் என்று நம்புகிறார்கள். மற்றொரு புறத்தில், தலித் மக்களோடு முரண் பாடுகளை கூர்மைப்படுத்திவரும் இடைநிலை ஜாதித் தலைவர்களை அரவணைக்கும் முயற்சிகளிலும் பா.ஜ.க. தீவிரம் காட்டி வருகிறது. ஆனால், சமூக தளத்தில் ஜாதிகளை மறுப்பதே ‘இந்து’க்களின் ஒற்றுமைக்கான முன் நிபந்தனை என்ற கருத்தை ஏற்க பா.ஜ.க. தயாராக இல்லை. ஜாதிகளைக் காப்பாற்றும் இந்துக்களின் அணி திரட்டல், சமூகத்தில் சாத்தியப்படுவதற்கான வாய்ப்புகளே இல்லை. இந்த ‘முரண்பாடுகள்’ நீடிக்கும் வரை பா.ஜ.க.வும் தமிழகத்தில் ஒரு அரசியல் சக்தியாக உருவெடுக்கவே முடியாது.

தலித் மக்கள் மீது ஜாதி ஆதிக்கவாதிகள் நடத்தும் தாக்குதல்கள்; கவுரவக் கொலைகள்; கோயில் திருவிழாவில் ஜாதி மோதல்கள் என்று எத்தனையோ ஜாதியப் பிரச்சினைகள் தலைதூக்கி இங்கே நிற்கின்றன. இந்துக்களின் ஒற்றுமை பேசும் பா.ஜ.க. இந்த மோதல் களங்களில் தலையிட்டு இந்துக்களின் ‘ஒர்மை’யைப் பேச ஏன் முன்வரவில்லை? இந்த களங்களில் பா.ஜ.க. காணாமல் போகும்போது தமிழ்நாட்டிலும் அந்த கட்சி காணாமல் போய்த்தான் நிற்கும்!

மக்களிடம் இயல்பாக படிந்து நிற்கும் ‘மத உணர்வு’களை மதவெறியாகக் கட்டமைக்க முயலுகின்றன. அகில இந்திய பா.ஜ.க.வும், சங்பரி வாரங்களும், அதற்கு அவர்கள் எதிரியாக இஸ்லாமியர்களை முன்னிறுத்த வேண்டி யிருக்கிறது. ஆனால், இஸ்லாமியர் வெறுப்பு அரசியலை முன்னெடுக்க தமிழகத்தில் இவர்கள் எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டாலும் அவற்றை எல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு ‘இந்து’ சமூகத்துக்குள்ளேயான ‘தலித் இடை நிலை ஜாதி’ முரண்பாடுகளே முன்னுக்கு வந்து கொண்டிருக்கின்றன. இந்த முரண்பாடுகளுக்கு முகம் கொடுக்காமல் ‘அம்பேத்கர் ஜெயந்தி’ நாடகங்களை அரங்கேற்றினால் போதுமா? தமிழ்நாட்டின் பா.ஜ.க. தலைவராக ‘எச். ராஜா’வை கொண்டு வருவது ஆபத்து; ‘தமிழிசை’யே பொருத்தமானவர் என்ற மேலிடத்தின் முடிவுக்குப் பின்னால் நிற்கும் சமூக அரசியல் எதை உணர்த்துகிறது? ஜல்லிக்கட்டுவை நடத்தியே தீருவோம் என்று தமிழக பா.ஜ.க. தலைவர்கள் முழங்குகிறார்கள். ஆனால் காட்சிப்படுத்தப்படும் விலங்குகளுக்கான தடை பட்டியலில் காளை மாடு இடம் பிடித்திருப்பதை நீக்காமலே ஜல்லி கட்டுக்கு தனி அவசர சட்டத்தை பிறப்பிக்கும் இரட்டை வேடத்துக்குப் பின்னால் பதுங்கி யிருக்கும் அரசியல் என்ன?

அகில இந்திய பா.ஜ.க. அதற்கான பார்ப்பனிய பண்புகளை மறைக்க ‘தமிழக பா.ஜ.க.வாக’ நடிக்க எத்தனை முகமூடிகளைப் போட்டுக் கொண்டு வந்தாலும் அரசியலில் இந்த இரட்டை வேடம் வேர் பிடிக்க வாய்ப்பே இல்லை. அவ்வப்போது எச். ராஜா, சுப்பிரமணியசாமியின் குரல்களுக்கும் - தமிழிசை, பொன். இராதா கிருஷ்ணன் குரல்களுக்கும் இடையே உள்ள ‘சுருதி’ பேதங்களை வைத்தே இதை உணர்ந்து கொள்ள முடியும்.

## வேத மரபு மறுப்பு மாநாடு - ஏன்?

- வேதங்களை பார்ப்பனர்கள் தங்களுக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டும் என்பதால் அதை அச்சில் ஏற்றவில்லை. எனவே அதற்கு ‘கேளாக் கிளவி’ என்ற பெயரும் உண்டு.

  தங்கள் மூளைக்குள்ளே பரம்பரையாக வேதங்களை மனப்பாடம் செய்து வந்தவர்கள் கடவுள்களோடு பேசும் உரிமை தங்களுக்கும் தங்கள் வேதத்துக்கும் மட்டுமே உண்டு என்று சமூகத்தை நம்ப வைத்தார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே தோன்றிய இந்த பார்ப்பன மேலாதிக்க சூழ்ச்சி இன்று வரை தொடர்ந்து கொண்டுதானே இருக்கிறது?

  அர்ச்சகர் ஆகும் உரிமை; யாகம் நடத்தும் உரிமை; கும்பாபிஷேகம் செய்யும் உரிமை; மதச் சடங்கு, பரிகாரங்கள் செய்யும் உரிமை; ஆளுநர் குடியரசுத் தலைவர், பிரதமர், முதல்வர், உயர் அதிகாரிகளுக்கு எதை எந்த நேரத்தில் செய்ய வேண்டும் என்று ஆலோசனை வழங்கும் உரிமை அத்தனையும் இப்போதும் யாரிடம்? பார்ப்பன புரோகிதர்களிடம் தானே!

- இப்படி வேதத்தை கடவுளை அரசியல் தலைவர் களை வழி நடத்துதலை தங்கள் வசமாக்கிக் கொண்டவர்கள் ஒரு காலத்தில் படிப்பையும் இதேபோல் தங்களுக்கே உரித்தாக்கினர். உத்தியோகத்தை வெகு மக்களுக்கு மறுத்தார்கள். வர்ணாஸ்ரமம் வழியாக ஜாதியமைப்பை திணித்து அது முறையாக செயல்படுகிறதா என்பதை கண்காணித்தார்கள்.
- ‘வேதகாலத்துக்கு திருப்புவோம்’ என்பதே அவர்களின் முழக்கம். அதுவே ஆர்.எஸ்.எஸ். அதன் அரசியல் வடிவமான பா.ஜ.க.வின் கொள்கை. அதற்காகவே அதிகாரத்தைப் பயன்படுத்து கிறார்கள். சமஸ்கிருதத்துக்கும் வேத பண்பாட் டிற்கும் கோடிகோடியாக அரசு பணம் விரயமாக்கப்படுகிறது.
- பிரிட்டிஷ் ஆட்சியின்போது இஸ்லாமியர் அல்லாத மக்கள் அனைவரையும் தங்களின் வேதமத பார்ப்பனியப் பிடிக்குள் இழுத்துக் கொண்டார்கள். அப்போது பிரிட்டிஷார் சூட்டிய பெயர்தான் ‘இந்து’ என்பது. ‘இந்து’ என்ற குடைக்குள் நாம் அனைவரும் ‘வேத மரபுக்குள்’ தள்ளப்பட்டோம். ஆனால், கல்வி, உத்தியோகம் என்று வரும்போது நமது மக்களோடு பகிர்ந்து கொள்ள பார்ப்பனர்கள் மறுத்தார்கள்.
- இந்த வேதமரபு அடக்குமுறைக்கு எதிராக வெகுமக்கள் உரிமைப் போராட்டங்கள் வெடித்தன! பார்ப்பனர்களுக்கு எதிராக ‘கல்வி, வேலை வாய்ப்பு - சூத்திரர் இழிவு ஒழிப்பு’ போராட்டங்களை பெரியார் தொடங்கினார், ஏன்? இந்த கொடூரமான வேதமரபு என்ற பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்துதான். ஆனால், கொடுமை என்னவென்றால் பெரியார் இந்துக்களை எதிர்க்கிறார் என்று பார்ப்பனர்கள் சூழ்ச்சியாக திசை திருப்பினார்கள். இப்போதும் அதே பிரச்சாரம்தான்!
- தோழர்களே! வேத காலத்திலேயே வேத மரபு எதிர்ப்பும் தொடங்கி விட்டது. ‘சார்வாகர்கள்’ வேத பார்ப்பனியத்தை எதிர்த்தார்கள்; அவர்கள் நூல்கள் முற்றாக அழிக்கப்பட்டன. சித்தர்கள் எதிர்த்தார்கள்; புத்தர் எதிர்த்தார்; சமணர்கள் எதிர்த்தார்கள்; வடலூர் வள்ளலார் எதிர்த்தார்; அத்தனை எதிர்ப்புகளையும் பார்ப்பனியம் எதிர்த்து – ஊடுருவி – இருட்டடித்து ஒழித்தே விட்டது.
- நமது சங்க இலக்கியங்கள் – நமது திருக்குறள் வேத மரபுகளை எதிர்த்தன. ‘பிறப்பில் வேற்றுமை இல்லை’ என்பதே நமது திருக்குறள் நெறி. ‘பிறப்பில் வேறுபாடு உண்டு; அதை கடவுளே படைத்தார்’ என்பது பார்ப்பனிய மரபு நூலான பகவத் கீதை கூறும் ‘நெறி’.
- ‘வேதங்களை மறுப்பவர்கள்தான் ஆபத்தானவர்கள். அவர்கள் நாத்திகர்கள்’ என்று எச்சரித்தார், இறந்து போன காஞ்சி சங்கராச்சாரி.
- நெஞ்சில் நிறுத்துங்கள்; வேத மரபு எதிர்ப்பு என்பது ‘இந்து’க்களின் எதிர்ப்பு அல்ல; அது ‘இந்து’ வெகு மக்களுக்கு மறுக்கப்படும் அநீதிகளுக்கான எதிர்ப்பு; அவர்கள் மீது சுமத்தப்படும் இழிவுகளுக்கான எதிர்ப்பு.

  நமது முன்னோர்கள் சார்வாகரும் – புத்தரும் – வள்ளலாரும் – பெரியாரும் வேத மரபு எதிர்ப்பை நமக்காக – நமது உரிமைகளுக்காகவே உயர்த்திப் பிடித்தார்கள். அந்தப் பதாகையை – அந்த மரபை – அந்தப் போராட்டக் குரலையே இப்போது நாமும் உரத்து முழங்குகிறோம்!

  ‘கடவுள்’ நம்பிக்கையாளர்களும் தங்களை ‘இந்து’ என்று நம்பிக் கொண்டிருக்கும் பார்ப்பனரல்லாத நமது தமிழ் மக்களையும் பங்கேற்க உரிமையோடு அழைக்கிறோம், வாருங்கள்!

**வேத மரபை மறுப்போம்**
**வெகுமக்கள் உரிமை மீட்போம்!**

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

# நெல்லையில் அணு உலைப் பூங்கா எதிர்ப்பு மாநாடு





அணு உலைப் பூங்கா என்பது, இரண்டுக்கும் மேற்பட்ட அணுவுலைகளை ஒரே இடத்தில் நிறுவுவதாகும். கூடங்குளத்தில் அமையவிருக்கும் 3,4,5,6 என்று அடுத்தடுத்து அணு உலை அமைக்க நினைக்கிறது அரசு. கூடங்குளத்தில் ஓர் அணு உலைப் பூங்கா அமைப்பதே திட்டம். அணு உலைப் பூங்காக்களால் போர், பயங்கரவாதிகளின் தாக்குதல் மற்றும் சுனாமி போன்ற இயற்கை பேரிடரால் பேராபத்து நிகழலாம்.

எனவே அணு உலை வேண்டாம் என்று தொடர்ந்து பல்வேறு பரப்புரைகளையும், போராட்டங்களையும் நடத்தி வரும், "அணுசக்தி எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு" சார்பாக 03-12-2016 சனிக்கிழமை அன்று மாலை 3-00 மணி முதல் இரவு வரை, திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை முருகன் குறிச்சி பகுதியில் உள்ள கிங்ஸ் சிக் அரங்கில் "கூடங்குளம் அணு உலைப் பூங்கா எதிர்ப்பு மாநாடு" நடைபெற்றது.

அமெரிக்கா, ஜப்பான், இரஷ்யாவுடனான அணு ஒப்பந்தங்களை இரத்து செய்ய வேண்டும்; கூடங்குளத்தில் அணு உலைப் பூங்கா அமைப்பதையும், கல்பாக்கத்தில் விரிவாக்கம் செய்வதையும் கைவிட வேண்டும்; தமிழகத்தை அணுக்கழிவுக் கூடமாக்க வேண்டாம் என இந்திய அரசை வலியுறுத்தியும், அணு உலைக்கு எதிராக போராடிய மக்கள் மீது போடப்பட்ட வழக்குகளை கைவிடவேண்டும் என தமிழக அரசை வலியுறுத்தியும் இந்த மாநாடு நடைபெற்றது.

நாகர்கோவில் 'முரசு' கலைக் குழுமத்தினரின் பறை முழக்கங்களோடு தொடங்கிய இந்த மாநாட்டின் இடையே, இசைப்பாறை அவர்கள் எழுதிய "இடிந்த கரையின் போராட்டம்" நூல் வெளியிடப்பட்டது. தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன், நூலின் முதல் பிரதியியை வெளியிட விடுதலை சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச்செயலாளர் வன்னியரசு பெற்றுக் கொண்டார்.

மாநாட்டின் ஒரு பகுதியாக பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெற்ற அறிவாளர் அரங்கத்திற்கு தாளாண்மை உழவர் இயக்கத்தைச் சார்ந்த திருநாவுக்கரசு தலைமை ஏற்றார். நாணல் நன்பர்கள் ஒருங்கிணைப்பாளர் தமிழ்தாசன் வரவேற்புரை ஆற்ற, முதல் இரண்டு அணு உலைக் குழறுபடிகள் என்ற தலைப்பில் பச்சைத் தமிழகம் தலைவர் சுப.உதயகுமார், மாற்று எரிசக்தி என்ற தலைப்பில் திருநாவுக்கரசு, என்.எஸ்.பி ஒப்பந்தம் என்ற தலைப்பில் பூவுலகு அமைப்பைச் சார்ந்த அருண் நெடுஞ்செழியன், அணு உலை அரசியலும், ஏகாதிபத்திய நலன்களும் என்ற தலைப்பில் இளந்தமிழகம் ஒருங்கிணைப்பாளர் செந்தில் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

மாலை 5-00 மணிக்கு தொடங்கிய அரசியல் அரங்கிற்கு அணுசக்தி எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளரும், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவருமான கொளத்தூர் மணி தலைமை ஏற்றார். சி.பி.எம்.எல்-மக்கள் விடுதலை அரசியல் தலைமைக் குழுவைச் சார்ந்த மீ.த பாண்டியன் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் முகிலன், இடிந்தகரை போராட்டக் குழு சுந்தரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன், விடுதலை சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச்செயலாளர் வன்னியரசு, தமிழ்த் தேசியப் பேரியக்கம் பொதுச்செயலாளர் கி.வெங்கட்ராமன், நாம் தமிழர் கட்சி மாநில ஒருங்கிணைப்பாளர் வியனரசு, தமிழக மக்கள் ஜனநாயக கட்சி தலைவர் செரிஃப், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட பொருப்பாளர் காசிவிசுவநாதன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட பொருப்பாளர் கே.ஜி.பாஸ்கர், மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த பொருப்பாளர்கள் கருத்துரை வழங்கினர்.

# வேத மரபை எதிர்த்துப் போராடிய வைகுண்ட சாமிகள்

*வேத மரபை எதிர்த்த முன்னோடிகளில் ஒருவர் வைகுண்ட சாமிகள். கன்யாகுமரிக்கு அருகே பூவண்டன் தோப்பு எனும் கிராமத்தில் ஓர் ஏழை நாடார் குடும்பத்தில் 1809 ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்கு பெற்றோர் சூட்டிய பெயர் 'முடி சூடும் பெருமாள்'. ஆனால் அந்த காலத்தில் மன்னர்கள் அல்லது பார்ப்பன உயர்ஜாதியினர் வைத்துக் கொள்ளும் பெயர்களை 'தாழ்ந்த' ஜாதியினராக கருதப்பட்டவர்கள் வைத்துக் கொள்ளக் கூடாது. எனவே இப்பெயர் வைத்தமைக்காக பார்ப்பனர், உயர்ஜாதியினர் அரசு அதிகாரிகளிடம் புகார் செய்தனர். அவர்களும் பெயரை மாற்ற உத்தரவிட்டனர். வேறு வழியின்றி பெற்றோர்கள், பெயரை 'முத்துக்குட்டி' என்று மாற்றினர்.*

- *1833இலிருந்து பொது வாழ்வில் இறங்கினார். தொடக்கத்தில் விஷ்ணு பக்தராக இருந்த இவர், தனது பெயரை 'வைகுண்டர்' என மாற்றிக் கொண்டார்.*
- *குமரிப் பகுதி அப்போது திருவாங்கூர் சமஸ்தானத்தின் நிர்வாகத்தில் இருந்தது. ஜாதி வெறியோடு ஆட்சி நடத்திய அரசர்கள், ஒடுக்கப்பட்ட ஜாதியினரை அடிமைகளாக நடத்தினர். அநியாயமாக வரி போட்டனர். மன்னனை எதிர்த்து துணிவோடு போராடினார் வைகுண்டர். 110 நாள்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.*
- *நாடார் சமூகம், அப்போது 'தீண்டப்படாதவர்களாக' கருதப்பட்டது. ஒரு நாடார், நம்பூதிரி பார்ப்பனரிடமிருந்து 36 அடி தூரத்திலும், நாயரிடமிருந்து 12 அடி தூரத்திலும் நின்றுதான் சந்திக்க வேண்டும். பொதுச் சாலையில் நடக்க உரிமை இல்லை.*
- *கோயில்களில் நுழையும் உரிமை இல்லை. கோயில்களுக்கு அருகே பள்ளிகள், அரசு அலுவலகங்கள் இருந்தால் அங்கேயும் போக முடியாது. குடை பிடிக்கவோ, செருப்பு அணியவோ முடியாது. பெண்கள் 'ரவிக்கை' அணியும் உரிமையை மறுத்தார்கள்.*
- *இந்தக் கொடுமைகளை எதிர்த்து களமிறங்கிய வைகுண்ட சாமிகள், மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த 'சமத்துவ சங்கம்' ஒன்றை தொடங்கினார். ஆண்கள், பெண்கள் என ஆயிரக்கணக்கானோர் அதில் உறுப்பினர்களானார்கள். ஊர் ஊராகச் சென்று வேத வைதிக மரபுகளுக்கு எதிராக சமத்துவக் கொள்கைகளை பரப்பினார்.*
- *கன்யாகுமரி மாவட்டத்தில் ஊர் தோறும் தனது கொள்கைகளைப் பரப்பிட 'நிழல்தாங்கல்' என்ற நிறுவனத்தை உருவாக்கினார். இது வழிபாட்டுத் தலமாகவும், கல்வி நிலையமாகவும், வைகுண்ட சாமிகளின் கருத்துகளைப் பரப்பும் மய்யமாகவும் செயல்பட்டது.*
- *கடவுளை சிலைகளுக்குள் அடைத்துவிட முடியாது என்று கூறிய அவர், தமது வழிபாட்டு முறையில் அர்ச்சகர்கள், உருவ வழிபாட்டை ஒதுக்கினார்.*
- *பேய்-பிசாசு-மாந்திரிக நம்பிக்கை - தமது மக்களிடையே தீவிரமாக பரவி இருந்ததை எதிர்த்தார். "பொய்யில்லை பிசாசுமில்லை, பில்லியின் வினைகளில்லை" என்று கூறினார்.*
- *கோயிலுக்குள்ளே நாடார் சமூகத்தைவிட மறுத்த புரோகிதர்கள், அவர்களின் காணிக்கையை இழக்கத் தயாராக இல்லை. எனவே தொலைவில் நின்று காணிக்கைகளை வீசவேண்டும்; பதிலுக்கு புரோகிதப் பார்ப்பனர்கள் இலையில் கட்டிப் பிரசாதத்தைத் தூக்கி வீசுவார்கள். இந்த இழிவை எதிர்த்து கோயிலுக்கு காணிக்கை வழங்காதீர் என்று வைகுண்டசாமி பரப்புரை செய்தார்.*

> *"காணிக்கையிடாதுங்கோ காவடி தூக்காதுங்கோ*
> *வீணுக்குத் தேடு முதல் விருதாவில் போடாதுங்கோ"*

*- என்று காணிக்கைத் தருவதை 'விருதா வேலை' என்று பாமரர் மொழியில் எடுத்துச் சொன்னார்.*

- *அந்த காலங்களில் ஒரு நாடார் சமூக இளைஞனுக்கு 16 வயதில் தலையில் தலைப்பாகைக் கட்டி கையில் பிச்சுவா கத்தி கொடுப்பார்கள். பல இடைநிலை ஜாதியினரிடம் இந்த வழக்கம் உண்டு. அதேபோல் குடும்பத் தலைவர் இறந்ததும் அவரது மகனுக்கு தலைப்பாகைக் கட்டுவார்கள். இதற்கு 'உறுமால் கட்டு' என்று பெயர். இடைக்காலத்தில் பார்ப்பனர்கள் உயர்ஜாதியினர் இந்த உரிமையை நாடார் சமூகத்துக்கு மறுத்தனர். சுமை தூக்கக்கூட தலைப்பாகை அணிய அனுமதிக்க வில்லை. 'சுடுமாடு' எனும் பெயரில் வைக்கோலை மட்டும் தலையில் வைக்க அனுமதிக்கப்பட்டனர். வைகுண்டர் வெகுண்டெழுந்தார். தன்னை சந்திக்க வருவோர் தலைப்பாகையுடன் தான் வரவேண்டும் என்று வற்புறுத்தினார். இப்போதும் அவரது இயக்கத்தினர் தலைப்பாகை அணிந்து வழிபடும் முறையை பின்பற்றுகிறார்கள்)*
- *ஒடுக்கப்பட்ட ஜாதியினர் ஓட்டு வீடு, மாடி வீடு கட்ட வேத புரோகித கூட்டம் அனுமதி மறுத்தது. வைகுண்ட சாமிகள் ஒரே திசையில் முன் கதவு வைத்த வீடுகளை அடுத்தடுத்து கட்டுமாறு கூறி, 'சமதர்ம குடியிருப்பை' உருவாக்கினார்.*
- *தனது சீடர்களை பல்வேறு ஊர்களுக்கு அனுப்பி, 'தீண்டப்படாத' ஜாதியினர் வீட்டில் உணவு அருந்த பணித்தார். தனது சொந்த ஊரில் அனைத்து ஜாதியினரும் பயன்படுத்தும் பொதுக் கிணற்றை வெட்டினார்.*
- *முகாம் நடத்தி, மக்களுக்கு சமத்துவ-வேத மறுப்பு கருத்துகளைப் பயிற்றுவித்தார். அங்கு அனைவருக்கும் உணவு பரிமாறப்பட்டது. 'துவையல் பந்தி' என்று அதற்குப் பெயர்.*
- *பார்ப்பனப் புரோகிதர்களையும் மன்னர்களையும் ஒரே நேரத்தில் துணிவுடன் எதிர்த்து நின்றவர். வைகுண்ட சாமிகள், "பிராமணர்களை பயம் காட்ட நாம் வருவோம்" என்று அடித்தட்டு மக்களுக்கு நம்பிக்கை ஊட்டினார். புரோகிதத்தை 'வேடம்' என்றார். "பிராமண வேசம் போட பக்தன்மாரே நீங்கள் உண்டு" என்று துணிவுடன் கூறினார். கிறிஸ்துவ மதமாற்றத்துக்கு இவரது இயக்கம் தடையாக இருந்ததால் கிறிஸ்துவ நிறுவனங்களும் இவரை எதிர்த்தன.*
- *தாழ்த்தப்பட்ட வகுப்புப் பெண்களை துணிவாக ஜாதித் தடைகளை எதிர்த்து தோள் சேலை (ரவிக்கை) அணியுமாறு வற்புறுத்தினார். அவரது மறைவுக்குப் பிறகு இந்து, கிறிஸ்துவ நாடார் இரு பிரிவினர் இணைந்து, 'தோள் சீலை' உரிமைப் போராட்டத்தை நடத்தினர். 1859இல் நாடார் பெண்களுக்கு 'தோள் சீலை' அணியும் உரிமையை திருவிதாங்கூர் அரசு வழங்கியது. மக்களின் தொடர் போராட்டம் காரணமாக 1865இல் ஏனைய ஒடுக்கப்பட்ட ஜாதி பெண்களுக்கும் இந்த உரிமை கிடைத்தது. 1851இல் வைகுண்டசாமி காலமானார்.*




(முதல் பக்கத் தொடர்ச்சி)

அதில் அடங்குவர். அத்தனையையும் பார்ப்பனியம் செரிமானம் செய்தது. அல்லது மக்களிடையே செல்வாக்குப் பெற விடாமல் தடுத்தது.

வேத காலம் தொடங்கி, பார்ப்பன வேத மறுப்பு சிந்தனைகள் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தாலும் மாபெரும் இயக்கமாகக் கட்டி எழுப்பியது பவுத்தம் தான். பவுத்தக் கொள்கையை மன்னர்கள் பலரும் அரசு கொள்கையாக ஏற்றனர். பார்ப்பனர்கள் அதை முடிவுக்குக் கொண்டு வந்த பிறகு, ஜோதி பாபுலே, பெரியார், அம்பேத்கர் போன்ற பார்ப்பன எதிர்ப்பாளர்கள் வந்தார்கள்.

தமிழ்நாட்டில் பெரியார் வந்தார்; பார்ப்பன வேத மரபு செரிமானம் செய்ய முடியாத ஒரே தலைவராக பெரியார் மட்டுமே இருக்கிறார். பெரியாரியம் தான் இப்போதும் வேத மரபுகளுக்கு சவால் விட்டுக் கொண்டிருக்கிறது.

பார்ப்பனிய வேத மரபை எதிர்த்த அம்பேத்கரையும் இப்போது பார்ப்பனியம் சொந்தம் கொண்டாடி வருகிறது.

'சங்பரிவாரங்கள்' இப்போது பெரியாரை மட்டும் தனிமைப் படுத்தி எதிர்ப்பதிலிருந்தே இதைப் புரிந்து கொள்ள முடியும்.

வேத மரபு எதிர்ப்பின் தொடர்ச்சிதான் திராவிடர் விடுதலைக் ழகம், டிசம்பர் 24 - பெரியார் பிறந்த நாளில் சேலத்தில் நடத்த இருக்கும் 'வேத மரபு மறுப்பு மாநாடு'.

நாம், பெரியார் பரம்பரையைச் சார்ந்தவர்கள். நமக்கு நீண்ட மரபு உண்டு. பரிவிராஜகர்கள், லோகாயதவாதிகள், சார்வாகர், சித்தர், புத்தர், சமணர், இராமலிங்கனார், பூலே, அம்பேத்கர் என்று வேத பார்ப்பன மரபை எதிர்ப்பதில் நமக்கு வழிகாட்டும் ஒளி விளக்குகளாக தலைவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

மாநாட்டில்பார்ப்பனிய வேத மறுப்புக் கொள்கையைக் கொண்ட சிந்தனையாளர்கள் பலரும் கருத்துரை வழங்க வருகிறார்கள்.

புதிய திருப்பத்தை உருவாக்கிட -

துள்ளிக் குதிக்கும் பார்ப்பன இறுமாப்புக்கு எச்சரிக்கை செய்திட -

வேத பார்ப்பன மறுப்பாளர்கள் அனைவரையும் ஒரே மேடையில் ஏற்றியிருக்கிறது - திராவிடர் விடுதலைக் கழகம்!

தோழர்களே! வாருங்கள்!

குடும்பத்துடன் வாருங்கள்!

கொள்கை முழக்கமிட்டு வாருங்கள்!

சேலம் அழைக்கிறது!

# வெங்கட்–இராஜலட்சுமி ஜாதி மறுப்புத் திருமணம்



4.12.2016 ஞாயிறு அன்று திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் செ.வெங்கட் (எ) வெங்கடேசனுக்கும் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர் இராஜலட்சுமிக்கும் எமகண்ட நேரத்தில் ஜாதி மறுத்து தாலிமறுத்து சுயமரியாதை திருமணமாக கோவையில் நடைபெற்றது. தோழர் சூலூர் பன்னீர்செல்வம் திருமணத்தை நடத்தி வைத்தார். இதில் திக, தபெதிக,திவிக தோழர்கள் மற்றும் நண்பர்கள், உறவினர்கள் கலந்து கொண்டனர். இணையர்கள் இணையேற்பின் நினைவாக 'புரட்சிப் பெரியார் முழக்க' இதழ் வளர்ச்சி நிதியாக 1000 ரூபாயும் கழக கட்டமைப்பு நிதியாக 1000 ரூபாயும் சேர்த்து 2000 ரூபாயை சூலூர் பன்னீர் செல்வத்திடம் வழங்கினார்கள்.

## நாள்காட்டி தயார்!

நாள்காட்டியின் : விலை : ரூ. 60

முன் பதிவு செய்வோருக்கு : ரூ. 50

தோழர்கள் விரைந்து முன்பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். முன்பதிவு எண்ணிக்கைக் கேற்பவே நாள்காட்டிகள் அச்சிடப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்புக்கு : தபசி. குமரன், தலைமைக் கழகச் செயலாளர், பேசி: 9941759641

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 16th December 2016

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN